TAMIL

# குடும்ப வன்முறை குறித்து நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய விடயங்கள்

குடும்பத்தினரது பாதுகாப்பைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால், எம்மால் உங்களுக்கு உதவ இயலும். Child Support, Centrelink அல்லது Medicare ஆகியவற்றுடன் நீங்கள் தொடர்புகொண்டால், அப்போது நீங்கள் நினைவில் கொள்ளவேண்டிய விடயங்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

## 1. உங்களைப் பற்றிய அடையாள ஆவணங்களை உங்களால் பெற இயலுமா?

உங்களுடைய மற்றும் உங்கள் பிள்ளைகளுடைய அடையாள ஆவணங்கள் வேண்டுமென நாங்கள் கேட்கக்கூடும். இதில் பின்வருவனவற்றைப் போன்ற ஆவணங்கள் உள்ளடங்கலாம்:

- ஓட்டுனர் / சாரதிப் பத்திரம்
- பிறப்புச் சான்று
- விசா விபரங்கள்
- கடவுச்சீட்டு.

இவற்றை உங்களால் அணுகிப் பெற இயலவில்லை என்றாலும், எம்மால் உங்களுக்கு உதவ முடியும். எம்முடன் தொடர்புகொள்ளுங்கள், வேறு வழிகளைப் பற்றிக் கண்டறிய நாங்கள் உங்களுடன் சேர்ந்து செயற்படுவோம்.

## 2. உங்களால் பெற இயலுமான கொடுப்பனவுகள் என்ன என்பது உங்களுக்குத் தெரியுமா?

உங்களால் பெற இயலுமான கொடுப்பனவுகள் மற்றும் சேவைகள் என்ன என்று பார்க்க எமது - Payment and Service Finder- ஐப் பயன்படுத்துங்கள். உங்களுக்கு அருகிலுள்ள சேவைகளைக் கண்டறியவும் நீங்கள் இதைப் பயன்படுத்தலாம். உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியைத் தெரிவு செய்து, 'குடும்ப வன்முறை' (family and domestic violence)-க்குச் செல்லுங்கள். ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களுக்கு **servicesaustralia.gov.au/paymentfinder** - இற்குச் செல்லுங்கள்.

## 3. உங்கள் சார்பாக வேறு யாராவது ஒருவர் எங்களோடு தொடர்புகொள்கிறார்களா?

பின்வரும் சூழ்நிலைகளில், அப்படிப்பட்ட ஏற்பாடுகளை நிறுத்திக்கொள்ள எம்மால் உங்களுக்கு உதவ இயலும்:

- வேறு யாராவது ஒருவர் உங்கள் சார்பாக Centrelink, Medicare அல்லது Child Support - உடன் தொடர்புகொள்வதற்கான அனுமதியை வைத்திருந்தால்
- வேறு யாராவது ஒருவர் உங்களுடைய Centrelink கொடுப்பனவுகளை வாங்கிக்கொண்டும் அவற்றைப் பயன்படுத்திக்கொண்டும் இருந்தால்.

மற்ற நபருக்கு இந்த மாற்றத்தைப் பற்றித் தெரிவிக்கவேண்டிய தேவை இருக்குமா என்பதை நாங்கள் உங்களுக்குச் சொல்வோம்.

## 4. உங்களுக்கோ, உங்களுடைய பிள்ளைகளுக்கோ My Health Record ஒன்று இருக்கிறதா?

உங்களுடைய அல்லது உங்கள் பிள்ளையினுடைய My Health Record -இல் உங்கள் விலாசம் போன்ற தொடர்பு விபரங்கள் இருக்கக்கூடும்.

இதனால் உங்கள் குடும்பத்திற்கு ஆபத்து வரக்கூடுமானால், **1800 723 471** -இல் My Health Record - ஐ அழைத்து தெரிவு 1-ஐத் தேர்ந்தெடுங்கள்

## 5. உங்களுடைய Centrelink கொடுப்பனவைப் பெறுவதற்கு நீங்கள் பூர்த்தி செய்யவேண்டிய வேறு தேவைப்பாடுகள் எதுவும் உள்ளனவா?

Centrelink கொடுப்பனவு ஒன்றைப் பெற 'பங்கேற்பு' (participation) அல்லது 'பரஸ்பரக் கடமைப்பாடு' (mutual obligation) என்ற தேவைப்பாடுகளை நீங்கள் பூர்த்தி செய்யவேண்டி இருக்கக்கூடும்.

பின் வரும் தருணங்களில் எம்முடன் அல்லது உங்களுடைய சேவை வழங்குனருடன் பேசுங்கள்:

- ஒரு சந்திப்புவேளைக்கு உங்களால் வர இயலவில்லை என்றால்

- உங்களுடைய ‘பங்கேற்பு’ அல்லது ‘பரஸ்பர கடமைப்பாடு’ தேவைப்பாடுகளை உங்களால் பூர்த்தி செய்ய இயலவில்லை என்றால்.

## 6. எம்மிடம் உள்ள உங்களைப் பற்றிய விபரங்களைப் புதுப்பித்துவிட்டீர்களா?

உங்களுக்கான பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, Child Support, Centrelink மற்றும் Medicare ஆகிய சேவைகளிடம் இருக்கும் உங்களைப் பற்றிய விபரங்களைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள். இது ஒரு புதிய தபால் விலாசமாகவோ, தொலைபேசி இலக்கமாகவோ இருக்கலாம்.

கொடுப்பனவுகளையும் எம்மிடமிருந்து வரும் தொடர்பாடல்களை நீங்கள் மட்டுமே பெறுகிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துவதே இதன் நோக்கம்.

## 7. உங்களுடைய கடவுச்சொற்கள் (passwords)எதையும் நீங்கள் மாற்ற வேண்டுமா?

உங்களுடைய இணையவழி அல்லது myGov கணக்குகளை வேறு யாரும் அடைய இயலும் என்றால், எச்சமயத்திலும் உங்களுடைய கடவுச்சொற்களை நீங்கள் மாற்றிக்கொள்ளலாம்.

உங்களுடைய பதிவுகளின் பாதுகாப்பினைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டால், அதை எமக்குத் தெரிவியுங்கள். உதாரணமாக, உங்களுடைய myGov கணக்கினை வேறு யாரும் அணுகியிருக்கிறார்கள் என்று நீங்கள் நினைத்தால், **132 307** -இல் myGov உதவி இணைப்பினை அழைத்து ஆங்கிலத்தில் உதவி வேண்டும் என்று கேளுங்கள்.

## 8. உங்களுடைய பெயரை வேறொரு Medicare அட்டைக்கு மாற்றவேண்டுமா?

முந்தைய Medicare அட்டை ஒன்றில் உங்களுடைய பெயர் இருப்பது உங்களுக்குப் பாதுகாப்பாக இருக்காது என்றால், ஒரு புதிய Medicare அட்டைக்கு நீங்கள் மாறிக்கொள்ளலாம்.

இப்படிச் செய்ய Medicare -ஐ **132 011** -இல் அழைத்து நீங்கள் என்ன செய்ய விரும்புகிறீர்கள் என்பதை ஆங்கிலத்தில் சொல்லுங்கள். அடுத்த கட்டத்திற்கு உங்களை வழி நடத்துவோம்.

## 9. உங்களுடைய பெயரில் உள்ள வங்கிக் கணக்கு ஒன்றை உங்களால் பாதுகாப்பாகப் பயன்படுத்த இயலுமா?

உங்களுக்கான பாதுகாப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, உங்களுடைய பெயரில் மட்டுமே உள்ள வங்கிக் கணக்கு ஒன்றைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தும் வசதி உங்களுக்கு வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்.

உங்களுடைய கொடுப்பனவுகளை அந்தக் கணக்கில் நாங்கள் செலுத்தவேண்டும் என்று நீங்கள் விரும்பினால், உங்களுடைய வங்கிக் கணக்கு விபரங்களை நீங்கள் மாற்ற வேண்டியிருக்கும்.

Centrelink, Medicare மற்றும் Child Support ஆகிய சேவைகளுக்கு நீங்கள் இப்படித் தனித்தனியாகச் செய்யவேண்டியிருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## 10. நாங்கள் கொடுக்கும் தகவல்களை விளங்கிக்கொள்வதில் உங்களுக்கு உதவி தேவையா?

எமது கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றிய தகவல்களை விளங்கிக்கொள்வதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், அதற்கான தெரிவுகள் உள்ளன. உதாரணமாக, கீழ்வரும் தருணங்களில் எம்மால் உங்களுக்கு உதவ இயலும்:

- உங்களுக்கு செவித்திறன் அல்லது பேச்சுக் குறைபாடு இருந்தால்
- யாருடனாவது நீங்கள் உங்கள் மொழியில் பேச வேண்டுமானால்
- உங்களுக்கோ, உங்களுடைய பராமரிப்பில் உள்ள ஒருவருக்கோ இயலாமை, சுகவீனம் அல்லது காயங்கள் இருந்தால்.

எம்முடன் உங்கள் மொழியில் பேசுவதற்கு, பின் வரும் இலக்கங்களை அழையுங்கள்:

- Centrelink கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றிப் பேச: **131 202**
- Medicare அல்லது Child Support கொடுப்பனவுகள் மற்றும் சேவைகளைப் பற்றிப் பேச **131 450**-இல் Translating and Interpreting Service (TIS National)

ஆங்கிலத்திலுள்ள மேலதிகத் தகவல்களைப் பெற **servicesaustralia.gov.au/accessibility**-இற்குச் செல்லுங்கள்.

**servicesaustralia.gov.au/yourlanguage**-யில் உங்கள் மொழியிலுள்ள தகவல்களையும் நீங்கள் காணலாம்.

## 11. தற்சமயம் உங்களுக்கு child support பதிவு ஒன்று இருக்கிறதா, அல்லது உங்களுடைய Family Tax Benefit - இற்காக நீங்கள் child support – இற்கு விண்ணப்பிக்கவேண்டி இருக்கிறீர்களா?

பின்வரும் விடயங்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட்டுக்கொண்டிருந்தால், ஆங்கிலத்தில் உள்ள தகவல்களைப் பெற **131 272** -இல் Child Support -ஐ அழையுங்கள்:

- உங்களுடைய முன்னாள் துணைவரிடமிருந்து child support வேண்டுவதைப் பற்றி
- உங்களுடைய முன்னாள் துணைவருடன் நாங்கள் தொடர்புகொள்வதைப் பற்றி.

## 12. வேறு எந்த அலுவலைப் பற்றியாவது நீங்கள் எம்முடன் பேச வேண்டியிருக்கிறதா?

பின் வரும் விடயங்களைப் பற்றிய கேள்விகள் உங்களுக்கு இருந்தால், நீங்கள் எம்முடன் பேசலாம்:

- Centrelink கொடுப்பனவுகள் அல்லது Centrelink -இற்கு நீங்கள் செலுத்தவேண்டிய கடன்தொகைகள்
- Medicare கொடுப்பனவுகள் அல்லது செயல்முறைகள்
- Child Support மதிப்பீடுகள் அல்லது Child Support -இற்கு நீங்கள் செலுத்தவேண்டிய கடன்தொகைகள்
- Child Support, Centrelink அல்லது Medicare ஆகிய சேவைகளிடம் இருக்கும் உங்களைப் பற்றிய பதிவுகளின் பாதுகாப்பு.

ஆங்கிலத்தில் உள்ள மேலதிகத் தகவல்களைப் பெற **servicesaustralia.gov.au/contactus** -இற்குச் செல்லுங்கள்:

## 13. மற்ற ஆதரவுதவி சேவைகளையும், உதவி சாதனங்களையும் நான் எங்கு காணலாம்?

எமது சமூக சேவகர்கள் இலவசமான மற்றும் அந்தரங்கமான அறிவுரையாலோசனையை அளித்துவருகிறார்கள். உதவக்கூடிய மற்ற சேவைகளுக்கு உங்களைப் பரிந்துரைக்க அவர்களால் இயலும். **132 850** -இல் எமது Employment Services இணைப்பினை அழைத்து சமூக சேவகர் ஒருவரிடம் பேச வேண்டுமெனக் கேளுங்கள். மொழிபெயர்த்துரைப்பாளார் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால் எமக்குத் தெரிவியுங்கள். இலவசமாக நாங்கள் ஒருவரை ஏற்பாடு செய்வோம்.

உங்களுக்கு உதவுவதற்காக மற்ற அமைப்புகள் உள்ளன. **servicesaustralia.gov.au/domesticviolence** -இல் ஆங்கிலத்திலுள்ள அட்டவணை ஒன்றை நீங்கள் காணலாம்.

**1800RESPECT (1800 737 732)** -யிடம் நாளுக்கு 24 மணி நேரமும், வாரம் 7 நாட்களும் இயங்கும் உதவித் தொலைபேசி இணைப்பும் 'உங்கள் பகுதியிலுள்ள சேவைகளைக் கண்டறியுங்கள்' ('Find services in your area') என்ற செயலியும் உள்ளன.

Ask Izzy என்பது உங்கள் பகுதியிலுள்ள சேவைகளைக் கண்டறிய உதவும் தொலைபேசி இலக்கப் புத்தகமாகும். **askizzy.org.au** எனும் வலைத்தளத்திற்குச் செல்லுங்கள்.

enough

# Family and domestic violence checklist

If you are concerned about your or your family's safety, we can help. Here are some things to keep in mind if you contact Child Support, Centrelink or Medicare.

## 1. Do you have access to personal identity documents?

We may ask for personal identity documents for you and your children. This could include documents like these:

- driver licence
- birth certificate
- visa details
- passport.

If you do not have access to them, we can still help you. Contact us and we will work with you to find other options.

## 2. Do you know what payments you can get?

Use our Payment and Service Finder to see what payments and services you may be able to get.

You can also use it to find services near you. Select your state or territory, then family and domestic violence. Go to **servicesaustralia.gov.au/paymentfinder** for more information in English.

## 3. Does someone else deal with us on your behalf?

We can help you end an arrangement if someone else:

- has permission to deal with Centrelink, Medicare or Child Support on your behalf
- is getting and using your Centrelink payment.

We will let you know if we need to tell the other party about the change.

## 4. Do you or your children have a My Health Record?

Your or your child's My Health Record can contain contact information such as your address.

If this could put your family at risk, call the My Health Record Help line on **1800 723 471** and select **option 1**.

## 5. Do you have any requirements you need to meet to get your Centrelink payment?

You may need to meet participation or mutual obligation requirements to get a Centrelink payment.

Talk to us, or your provider, if you cannot:

- attend an appointment
- meet your participation or mutual obligation requirements.

## 6. Have you updated your personal details with us?

As part of your safety planning, update your personal details with Child Support, Centrelink and Medicare. This could be a new postal address or phone number.

This is to make sure only you get payments and correspondence from us.

## 7. Do you need to change any of your passwords?

If someone else has access to your online or myGov accounts, you can change your passwords at any time.

If you are concerned about the security of your records, let us know. For example, if you think someone has accessed your myGov account, call the myGov help desk on **132 307** for help in English**.**

## 8. Do you need to transfer yourself to another Medicare card?

You can transfer to a new Medicare card if it is unsafe to remain on a previous card.

To do this, call Medicare on **132 011** and tell us what you want to do in English. We will direct you to the next step.

## 9. Do you have secure access to a bank account in your own name?

As part of your safety planning, you may have secure access to a bank account in your name only.

If you would like us to send your payments to that account, you will need to change your bank account details. Remember, you will need to do this separately for Centrelink, Medicare and Child Support.

## 10. Do you need help to understand our information?

If you need help to understand information about our payments and services, there are options available. For example, we can help if:

- you have a hearing or speech impairment
- you need to talk to someone in your language
- you or someone in your care have a disability, illness or injury.

To speak to us in your language, call:

- **131 202** about Centrelink payments and services
- the Translating and Interpreting Service (TIS National) on **131 450** about Medicare or Child Support payments and services.

Go to **servicesaustralia.gov.au/accessibility** for more information in English.

You can also find information in your language at **servicesaustralia.gov.au/yourlanguage**

## 11. Do you have a current child support case or need to apply for child support for your Family Tax Benefit?

Call Child Support on **131 272** for information in English if you are concerned about:

- seeking child support from your ex-partner
- us contacting your ex-partner.

## 12. Is there other business you need to talk to us about?

You can talk to us if you have questions about:

- Centrelink payments or debt
- Medicare payments or processes
- Child Support assessments or debt
- the security of your Child Support, Centrelink or Medicare records.

Go to **servicesaustralia.gov.au/contactus** for more information in English.

## 13. Where can I find other support services and tools?

Our social workers provide free, confidential counselling. They can refer you to other services that might help. Call our Employment Services line on **132 850** and ask to speak to a social worker. Let us know if you need an interpreter. We will arrange one for free.

There are other organisations to help you. You can find a list in English at **servicesaustralia.gov.au/domesticviolence**

**1800RESPECT (1800 737 732)** has a 24 hour, 7 day a week helpline and 'Find services in your area' function.

Ask Izzy is a directory to help you find services in your area. Go to **askizzy.org.au**